செ.வெ.எண் : 39/ ஜூன் நாள் : 28.06.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## குழந்தைத் திருமணம் நடத்தும் பெற்றோர் உட்பட குழந்தைத் திருமணத்திற்கு உறுதுணையாக இருப்போர் மீதும் சட்டப்படி கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

இராமநாதபுரம் மாவட்டத்தில் குழந்தைத் திருமணங்களை தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட சமூகநல அலுவலர், சைல்டு லைன் (1098), மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மற்றும் குழந்தை நலக்குழு ஆகியோர் ஒருங்கிணைந்து "குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் 2006-ன்" கீழ் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பு மாதத்தில் பரமக்குடி, நயினார் கோவில், கமுதி, கீழக்கரை மற்றும் திருப்புல்லாணி ஆகிய வட்டாரங்களிலுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் பொது காவல் நிலையங்களில் குழந்தைத் திருமணங்கள் தொடர்பாக மொத்தம் 6 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இவ்வாறு, வழக்குப்பதிவு செய்யப்படும் நபர்களுக்கு 2 ஆண்டுகள் ஜாமீனில் வெளிவர முடியாத கடுங்காவல் தண்டனை அல்லது 1 இலட்சம் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டணையாக வழங்கிட சட்டத்தின் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. முாவட்டத்தில் உள்ள கிராம ஊர்த் தலைவர்கள், ஊராட்சிமன்றத் தலைவர், சமூக அளவிலான சங்கங்கள் மற்றும் ஜமாத் தலைவர்கள் உட்பட தன்னார்வலர்கள் அனைவரும் குழந்தைத் திருமணம் தடுப்பு தொடர்பாக மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வரும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்திட வேண்டும். குழந்தைத் திருமணம் என்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே, குழந்தைத் திருமணங்களை நடத்தும் பெற்றோர் மணமகன்/ மணமகள் வீட்டார், திருமணத்திற்கு உறுதுணையாக இருப்பவர்கள் அனைவர் மீதும் மேற்குறிப்பிட்டுள்ள சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**